**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1,2வாதிகள் ஆஜர் இல்லை. 3ம்பிரதிவாதி ஆஜர். 1,2,4 முதல் 6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.856/2022

பி.வா.சா.3 தெய்வசிகாமணி த/பெ மாரப்பகவுண்டர்

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

1. 1ம்பிரதிவாதியான விஸ்வநாதன் என்பவரிடம் இருந்து 08.07.2022 தேதியில் கிரைய ஆவணத்தின் மூலமாக தாவா சொத்தை கிரைய பெற்றேன் என்றால் சரிதான். அதன் கிரய தொகை எவ்வளவு என்றால் ரூ.4,50,000/– ஆகும். மேற்படி கிரைய பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். மேற்படி நான் கிரையம் பெற்ற பிறகு கிரைய தேதியிலிருந்து தாவா சொத்தில் சுவாதீணம் மற்றும் அனுபவத்தில் இன்றைய தேதி வரை இருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. மேற்படி தாவா சொத்தை கிரைய பெறுவதற்கு முன்பு 1ம்பிரதிவாதி விஸ்வநாதனிடம் தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்கள், வில்லங்கள் எல்லாம் பார்த்து மேலும் அவர் பெயரில் உள்ளது என்பதை உறுதி செய்து, விசாரித்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தில் எவ்வித வில்லங்கமும் இல்லை என்பதை விசாரித்து உறுதி செய்த பிறகு 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்கள்.